செ. கு. எண்: 012 நாள்: 18.01.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின்**

அறிக்கை - 18.1.2018

ஜம்மு–காஷ்மீர் மாநிலம், ஆர்.எஸ் புரா பகுதியில் இந்திய நாட்டின் எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், பண்டாரசெட்டிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த எல்லை பாதுகாப்பு படை, 78–வது படைப்பிரிவின் தலைமைக் காவலர் திரு. அ.சுரேஷ் த/பெ திரு. அய்யாசாமி என்பவர் 17.1.2018 அன்று எதிரிகளின் தாக்குதலில் வீரமரணம் அடைந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது, உயிரிழந்த தலைமைக் காவலர் திரு. அ.சுரேஷ் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த எல்லை பாதுகாப்புப் படை தலைமைக் காவலர் திரு. அ.சுரேஷ் அவர்களின் குடும்பத்திற்கு இருபது லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**